சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ. எண். 56/2023

பெயர் திரு. பாஸ்கர் நாள். 06.07.2026
த/பெ. ஏழுமலை

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் சாட்சி 1(பி.சா.2) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(இல்லை என தெரிவிக்கப்பட்டது)

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் சாட்சி 1(பி.சா.2) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 1ம் பிரதிவாதி என்னுடைய பெரிய தகப்பனார். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். அதனை அவர்கள் தனித்தனியே பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் குடும்பத்தில் மூத்தவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மூத்தவர் என்பதால் அவர் பெயரில் தனிப் பட்டா வந்தது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வழக்கு சொத்து குறித்து வில்லங்கம் பார்த்தேன். அந்த வில்லங்கத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்குத் தெரியாது. அதனை தாக்கல் செய்தால் தான் உண்மையா இல்லையா என்று தெரிய வரும் என்றால் சரிதான். பி.த.சா.ஆ.4 ஐ எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் 2009 ல் ஆவணம் பதிவு செய்ததால் தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் செப்டம்பரில் கிரையம் வாங்கினேன் என்றாலும், வாதி ஆகஸ்ட் மாதத்தில் கிரையம் பெற்றார் என்றாலும் சரிதான். பி.த.சா.ஆ 1 ல் கண்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள் என்றாலும், தனிப்பட்ட சொத்துக்கள்

ஏதுமில்லை என்று சொன்னாலும் சரிதான். 1ம் பிரதிவாதியுடன் உடன் பிறந்தவர்கள், வள்ளியம்மாள், பூபதி மற்றும் சண்முகம் ஆவர். மேற்கண்ட வள்ளியம்மாள், பூபதி மற்றும் சண்முகம் ஆகியோரின் பாகச் சொத்துக்களை தான் வாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் 1ம் பிரதிவாதியின் பாகச் சொத்துக்களையும் சேர்த்து கிரையம் வாங்கிவிட்டார்.

3) வழக்கு புல எண்களுக்கு 1ம் பிரதிவாதி பெயரில் தனிப் பட்டா இல்லை. நாங்கள் கிரையம் வாங்கும் போது, வாதியின் கிரையம் பற்றி தெரியும். ஆனால், வழக்கு புல கிரையம் வாங்கியது பற்றி தெரியாது. அது பற்றி எனக்கு வழக்கு தாக்கல் செய்யும் போது தான் தெரியும். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் பாகத்தில் வைக்கவில்லை என்றாலும், வள்ளியம்மாள், பூபதி மற்றும் சண்முகம் பாகத்திற்கு வைக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு உரிமையானது என்றால் சரியல்ல. வாதிகள் கிரையம் பெற்ற பிறகு வழக்கு சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்துவதற்காக வழக்கு சொத்தை நாங்கள் கிரையம் பெற்றோம் என்றால் சரியல்ல. எங்கள் கிரைய ஆவணம் செல்லதக்கது அல்ல என்றாலும், வாதிகளை கட்டுபடுத்தாது என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.